12ஆம் வகுப்பு

# அரசு பொதுத்தேர்வு மார்ச் - 2024

## மொழிப்பாடம் - பகுதி I - தமிழ்

**கால அளவு : 3.00 மணி நேரம் ]** **(வினாத்தாள் விடைகளுடன்)** **[ மொத்த மதிப்பெண்கள் : 90**

**அறிவுரைகள் :** **(1)** அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

**(2)** **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக [14 × 1 = 14]

**1.** "மின்னோர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது தன்னோர் இலாத தமிழ்!" - இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்

அ) அடிஎதுகை, சீர்மோனை

ஆ) அடிமோனை, அடிஎதுகை

இ) சீர்எதுகை, அடிமோனை

ஈ) சீர்மோனை, சீர்எதுகை

**2.** பொருத்தி விடை தேர்க.

| | | | |
|---|---|---|---|
| 1) | குரங்குகள் | (i) | கன்றுகளைத் தவிர்த்தன |
| 2) | விலங்குகள் | (ii) | மரங்களிலிருந்து வீழ்ந்தன |
| 3) | பறவைகள் | (iii) | குளிரால் நடுங்கின |
| 4) | பசுக்கள் | (iv) | மேய்ச்சலை மறந்தன |

அ) (1)-(iii), (2)-(ii), (3)-(i), (4)-(iv)

ஆ) (1)-(i), (2)-(iii), (3)-(iv), (4)-(ii)

இ) (1)-(ii), (2)-(i), (3)-(iii), (4)-(iv)

ஈ) (1)-(iii), (2)-(iv), (3)-(ii), (4)-(i)

**3.** 'பலர் துஞ்சவும் தான் துஞ்சான்' - விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும்:

அ) கணைக்கால் இரும்பொறையை, கபிலர்

ஆ) சோழன் நெடுங்கிள்ளியை, பாணர்

இ) கரிகாலனை, உருத்திரங்கண்ணனார்

ஈ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்

**4.** 'விளியறி ஞமலி' -இதில் குறிப்பிடப்படும் விலங்கு :

அ) நாய் ஆ) எருது

இ) யாளி ஈ) குதிரை

**5.** சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.

அ) கடுக்காய் ஆ) வசம்பு

இ) மாவிலைக்கரி

ஈ) மணத்தக்காளியிலைச் சாறு

**6.** சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கை மையம் - காரணம்:

அ) மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியில் பங்கு

ஆ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை

இ) நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்

ஈ) (அ), (ஆ), (இ) - அனைத்தும்

**7.** சரியானவற்றைப் பொருத்தித் தேர்க.

| | | | |
|---|---|---|---|
| 1) | காதை | (i) | கந்தபுராணம் |
| 2) | சருக்கம் | (ii) | சீவகசிந்தாமணி |
| 3) | இலம்பகம் | (iii) | சூளாமணி |
| 4) | படலம் | (iv) | சிலப்பதிகாரம் |

அ) (1)-(iii), (2)-(iv), (3)-(ii), (4)-(i)

ஆ) (1)-(iv), (2)-(iii), (3)-(ii), (4)-(i)

இ) (1)-(iv), (2)-(iii), (3)-(i), (4)-(ii)

ஈ) (1)-(iii), (2)-(iv), (3)-(i), (4)-(ii)

**8.** ஏழ் ஆண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில் சூழ்கழல் மன்னற்குக் காட்டல் ..... தொடர்களில் வெளிப்படும் செய்திகள்

1) மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள்.

2) ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்.

அ) (1) தவறு; (2) தவறு ஆ) (1) சரி; (2) தவறு

இ) (1) சரி; (2) சரி ஈ) (1) தவறு; (2) சரி

**9.** எளியது, அரியது என்பன :

அ) சிறுமை பல செய்வது - பகைவர் தொடர்பு

ஆ) தீயினத்தின் துணை - நல்லினத்தின் துணை

இ) மெய்ப்பொருள் காண்பது - உருவுகண்டு எள்ளாதது

ஈ) சொல்வது - சொல்லியபடி செய்வது

**10.** 'உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில் - இத்தொடரில் இடம் பெற்றுள்ள பெயரெச்சம்

அ) வளர்ந்த ஆ) உண்டு

இ) இடந்தனில் ஈ) பிறந்து

**11.** ச.த. சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல் :

அ) சமணமும் தமிழும்

ஆ) பௌத்தமும் தமிழும்

இ) கிறித்துவமும் தமிழும்

ஈ) இசுலாமும் தமிழும்

**12.** மறைத்துச் சொல்லவும் மிகுத்துச் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி :

அ) அங்கதம் ஆ) குறியீடு

இ) தொன்மம் ஈ) படிமம்

**13.** பிழையான தொடரைக் கண்டறிக.

அ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.

ஆ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.

இ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.

ஈ) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.

**14.** தோப்பில் முகமது மீரானுக்குச் சாகித்திய அகாதெமி விருது பெற்றுத் தந்த நூல் :

அ) கூனன் தோப்பு ஆ) துறைமுகம்

இ) சாய்வு நாற்காலி

ஈ) ஒரு குட்டித் தீவின் வரைபடம்

### பகுதி - II – பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு** விடை தருக. [3 × 2 = 6]

**15.** ஞாலத்தின் பெரியது எது?

**16.** நெடுநல்வாடை - பெயர்க்காரணம் தருக.

17. வசனம், கவிதை - வேறுபாடு தருக.
18. முகம் முகவரியற்றுப் போனதற்கு சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணத்தை எழுதுக.

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டனுக்கு** விடை தருக. [2 × 2 = 4]

19. புக்கில், தன்மனை - சிறு குறிப்பு எழுதுக.
20. முறை வைப்பு என்றால் என்ன?
21. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.

**பிரிவு - 3**

**எவையேனும் ஏழனுக்கு** விடை தருக. [7 × 2 = 14]

22. தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?
23. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
    மாணவர்கள் பெற்றோர்களை தமது நண்பர்களாக பாவித்து நட்புக் கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.
24. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.
    ரங்கன் வெங்கலப் பாத்திரக்கடை வைத்திருக்கிறார்.
25. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
    நிலத்தக் கௌறணும்டா அப்பதான் வகுறு நிறையும்.
26. பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்கவும்.
    தின்மை - திண்மை
27. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
    அ) செய்த ஆ) கலங்கி
28. கலைச் சொல்லாக்கம் தருக.
    அ) Stapler ஆ) Teller
29. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
    அ) உரனுடை ஆ) தலைக்கோல்
30. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்கவும்.
    அ) கோவில் ஆ) தாமரை

**பகுதி - III – பிரிவு - 1**

**எவையேனும் இரண்டனுக்கு** விடை தருக. [2 × 4 = 8]

31. 'ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
32. சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.
33. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.
34. கடையெழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப்படுத்துக.

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டனுக்கு** மட்டும் விடை தருக. [2 × 4 = 8]

35. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்குக.
36. மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்கவும்.
37. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.
38. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.

**பிரிவு - 3**

**எவையேனும் மூன்றனுக்கு** விடை தருக. [3 × 4 = 12]

39. அ) சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும் ஏமப் புணையைச் சுடும். - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

**அல்லது**

ஆ) உவமை அணியைச் சான்றுடன் விளக்குக.

40. இலக்கிய நயம் பாரட்டுக. (மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை விளக்குக.)

முச்சங்கங் கூட்டி
  முதுபுலவர் தமைக் கூட்டி
அச்சங்கத் துள்ளே
  அளப்பரிய பொருள்கூட்டி
சொற்சங்க மாகச்
  சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
  அமைத்த பெருமாட்டி! - கண்ணதாசன்

41. அ) வாகைத் திணையைச் சான்று தந்து விளக்குக.

**அல்லது**

ஆ) செவியறிவுறூஉ துறையைச் சான்றுடன் விளக்குக.

42. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.
    அ) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை

**அல்லது**

ஆ) ஊழி பெயரினும் தாம் பெயரார்.

43. தமிழாக்கம் தருக.
    1) If you want people to understand you, speak their language.
    2) A new language is a new life.
    3) The limits of my language are the limits of my world.
    4) Knowledge of languages is the doorway to wisdom.

**பகுதி - IV**

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. [3 × 6 = 18]

44. அ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக. **அல்லது**

ஆ) அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணைநிற்கும் என்பதை வள்ளுவம் வழி நின்று நிறுவுக.

45. அ) பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக. **அல்லது**

ஆ) "ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு" - நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து இருபக்க அளவில் கட்டுரை எழுதுக.

46. அ) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்கவும்.

**அல்லது**

ஆ) 'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு' - இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியவை யாவை?

**பகுதி - V**

47. **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** [4 + 2 = 6]
    அ) ''அறிவும்'' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.
    ஆ) 'பொருள்' என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

# விடைகள்

## பகுதி - I

1. அ) அடிஎதுகை, சீர்மோனை
2. ஈ) (1)-(iii), (2)-(iv), (3)-(ii), (4)-(i)
3. ஈ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்
4. அ) நாய்
5. அ) கடுக்காய்
6. ஈ) (அ), (ஆ), (இ) - அனைத்தும்
7. ஆ) (1)-(iv), (2)-(iii), (3)-(ii), (4)-(i)
8. இ) (1) சரி; (2) சரி
9. ஈ) சொல்வது - சொல்லியபடி செய்வது
10. அ) வளர்ந்த
11. இ) கிறித்துவமும் தமிழும்
12. ஆ) குறியீடு
13. அ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.
14. இ) சாய்வு நாற்காலி

## பகுதி - II - பிரிவு - 1

15. உரிய காலத்தில் ஒருவர் செய்த உதவி அளவில் சிறியதாக இருந்தாலும் அது உலகத்தின் அளவை விடப் பெரியதாகும்.

16. (i) நெடுமை + நன்மை + வாடை - நெடுநல்வாடை.
(ii) தலைவனை பிரிந்த தலைவிக்கு நெடுவாடையாகவும் போர்ப்பாசறையில் இருந்த தலைவனுக்கு வெற்றி பெற ஏதுவான நல்வாடையாகவும் அமைந்துள்ளதால் நெடுநல்வாடை என்ற பெயர் பெற்றது.

17.

| வசனம் | கவிதை |
|---|---|
| எதுகை, மோனை நயங்கள் இல்லாமல், அடியளவை அறிந்திடாமல் எழுதுகின்ற எளிய வடிவமே **வசனம்** ஆகும் | யாப்பிலக்கண விதிகளுக்கு உட்பட்டு சீர், அசை, தளை, அடி, தொடை பாவகை இவற்றைக் கொண்டு இயற்றுவது **'கவிதை'** ஆகும். |

18. (i) தனக்குள்ளே தன்னைத் தொலைத்த பின்பு **தனது முகம் முகவரியற்றுப் போனது** என்று சுகந்தி சுப்பிரமணியன் கூறுகிறார்.
(ii) இறுக்கமான சூழலில் தன்னைச் சுருக்கிக் கொண்ட பின்பு, **தனது அடையாளத்தை** இழந்து விட்டதை இவ்வாறு அவர் குறிப்பிடுகிறார்.

## பிரிவு - 2

19. (i) **புக்கில்: தற்காலிகமாக** தங்குமிடம் புக்கில் என்று **புறநானூறு** குறிப்பிட்டுள்ளது.
(ii) **தன்மனை:** திருமணத்திற்குப் பின் கணவனும், மனைவியும் பெற்றோரிடமிருந்து பிரிந்து, **தனியாக வாழுமிடம்** தன்மனை என்று **சங்க இலக்கியம்** குறிப்பிட்டுள்ளது.

20. **முறை வைப்பு :** உபாத்தியாயர் நெடுங்கணக்கைச் சொல்லிக் கொடுக்க, அதை **மாணாக்கர் பலரும்** சேர்ந்து சொல்வது **முறை வைப்பு** என்று கூறுவார்கள்.

21. **கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் :**
(i) **காலின் மெக்கன்சி**யின் தொகுப்புகளை அடிப்படையாகக் கொண்டு **1869–இல்** உருவாக்கப்பட்ட நூலகம்.
(ii) இந்நூலகம் அரிய **ஓலைச்சுவடிகள், தாள் சுவடிகள், புத்தகங்கள்** எனப் பெரும் தொகுப்புகளைக் கொண்டது.

## பிரிவு - 3

22. **தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள்:**
(i) எழுத்தினைத் தெளிவாக உச்சரிக்கப் பழக வேண்டும். ந, ண, ன, ல, ள, ழ, ற, ர ஒலிப்பு வேறுபாடு தெரிந்து உச்சரிக்கப் பழகுதல் வேண்டும்.
(ii) தொடக்கத்தில் சில காலம் வாய்விட்டோ அல்லது மனதுக்குள் உச்சரித்தபடியோ எழுதப் பழக வேண்டும்.
(iii) வேகமாக எழுத முயற்சிப்பது பிழைக்கு வழிவகுக்கும்.
(iv) கெ, கே, கொ, கோ போன்று கொம்புடைய குறில் நெடில் வேறுபாட்டினைப் புரிந்து எழுத வேண்டும்.

23. மாணவர்கள் பெற்றோர்களைத் தமது நண்பர்களாகப் பாவித்து நட்பு கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களைப் பெற்றோர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

24. அரங்கன் வெண்கலப் பாத்திரக் கடை வைத்திருக்கிறார்.

25. நிலத்தை உழ வேண்டும் அப்போதுதான் வயிறு நிறையும்.

26. பிறர்க்குத் **தின்மை** செய்வதை நிறுத்தி அவர்களின் மனத்**திண்மை**யை உயர்த்து. (தின்மை - தீமை, திண்மை - உறுதி)

27. அ) செய்த - செய் + த் + அ
செய் - பகுதி
த் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி
ஆ) கலங்கி - கலங்கு + இ
கலங்கி - பகுதி
இ - வினையெச்ச விகுதி

28. அ) கம்பி தைப்புக் கருவி
ஆ) விரைவுக் காசாளர்

29. அ) உரனுடை - உரன் + உடை
**விதி :** உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
**சொல் மாற்றம்** : உரன் + உடை = உரனுடை
ஆ) தலைக்கோல் - தலை + கோல்
**விதி :** இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்
**சொல் மாற்றம்** : தலை + க் + கோல் = 'தலைக்கோல்'

30. அ) **கோவில்** - கோவிலுக்குள் சென்று வந்தால் மனதுக்கு நிம்மதி கிடைக்கிறது.
கோ + வில்லானது - குறிதவறாமல் எதிரியைத் தாக்கும்.( கோ வில் - அரசனுடைய வில்)
ஆ) **தாமரை** - குளத்தில் தாமரை மலர்ந்திருந்தது.
தா + மரை - வயலில் துள்ளித் திரிந்த மரையை அனைவரும் கண்டு ரசித்தனர்.(மரை - மான்)

## பகுதி - III - பிரிவு - 1

31. (i) **இடம் :** 'தண்டியலங்காரம்' என்ற அணியிலக்கண நூலில் பொருளணியில் இந்த அடியானது இடம் பெற்றுள்ளது.
(ii) **பொருள் :** மலைகளுக்கு இடையே தோன்றி, சான்றோர்களால் (உயர்ந்தோர்) வணங்கப்படுகின்ற கதிரவன், ஓசை நிறைந்த கடல் நீரால் சூழப்பட்டுள்ள இந்த உலகத்தின் புற இருளை நீக்குகிறது.
(iii) **விளக்கம் :** மலையில் தோன்றி சான்றோரால் வணங்கப்படுகின்ற, இருளைப் போக்குகின்ற பொருள்கள் இரண்டு உள்ளன. ஒன்று மின்னலைப்போல் ஒளிர்கின்ற கதிரவன். மற்றொன்று பொதிகைமலையில் தோன்றி, வளர்ந்த, மக்களின் அறியாமை என்னும் இருளைப்போக்குகின்ற தனக்கு நிகரில்லாத தமிழாகும்.

32. (i) இராவணன் சீதையை சிறையெடுத்து சென்றபோது சடாயு என்னும் கழுகு வேந்தன் இராவணனை தடுக்க, இருவருக்குமிடையே நடந்த போரில் சடாயு காயமடைந்தான்.
(ii) நடந்தவற்றை சடாயு, இராமனிடம் கூறிவிட்டு இறந்து விடுகிறான். இராமன் சடாயுவைத் தன் தந்தையாகவே கருதி, இறுதிச் சடங்குகளைச் செய்தான்.
(iii) கரிய அகில் கட்டைகளையும் சந்தனக் கட்டைகளையும் இராமன் கொண்டுவந்து வைத்தான். தேவையான அளவு தருப்பைப் புற்களையும் ஒழுங்குபட அடுக்கினான். பூக்களையும் கொண்டுவந்து தூவினான். மணலினால் மேடையைத் திருத்தமாக அமைத்தான். நன்னீரையும் எடுத்து வந்தான்.
(iv) இறுதிச் சடங்கு செய்யப்படக்கூடிய மேடைக்குத் தன் தந்தையாகிய சடாயுவைப் பெரிய கைகளில் தூக்கிக் கொண்டு வந்தான். இவ்வாறாக சடாயுவைத் தந்தையாக ஏற்று இராமன் தன் கடமைகளை ஆற்றினான்.

33. **மூங்கில் அளவு :**
(i) சிறந்த சிற்ப ஆசிரியர்களால் சொல்லப்பட்ட இயல்புகள் மாறாத நல்ல நிலத்தை அரங்கிற்காகத் தேர்ந்தெடுத்தனர்.
(ii) பொதிகை மலையில் நீண்ட அளவுள்ள மூங்கிலில், ஒரு சாண் அளவு கணுக்களை உடைய மூங்கிலை கொண்டு வந்தனர்.
(iii) கைப் பெருவிரலில் இருபத்து நான்கு அளவில் அதை வெட்டினர். அதில் ஏழுகோல் அகலம், எட்டுகோல் நீளம். ஒரு கோல் உயரம் உடையதாக அரங்கை அமைத்தனர்.
(iv) மேல் பலகைக்கும் தரைப்பலகைக்கும் இடையே நான்கு கோல் அளவு இருந்தது.

**அரங்கம் அமைத்தல் :**
(i) அரங்கிற்கு செல்லவும் வரவும் இரு வாயில்கள் அமைத்தனர். மேல்நிலையில் ஐம்பூதங்களைக் கொண்டு ஓவியம் வரைந்தனர்.
(ii) தூணின் நிழல் அரங்கில் விழாதபடி அழகான நிலை விளக்குகள் நிறுத்தினர்.
(iii) ஒரு முகத்திரை, பொருமுகத்திரை, கரந்துவரல் திரை மூன்றையும் சிறப்பாக அமைத்தனர்.
(iv) ஓவியத்தால் மேற்கூரை அமைத்து அரங்கம் முழுவதும் முத்து மாலைகளைத் தொங்கவிட்டனர். இவ்வாறு நாட்டிய அரங்கம் அமைத்தனர்.

34.

| வள்ளல் பெயர் | செய்த செயல் |
|---|---|
| பேகன் | குளிரால் நடுங்கி அகவும் மயிலுக்கு தன்னுடைய போர்வையை கொடுத்தவன். |
| பாரி | முல்லைக்கொடி படர்வதற்குத் தனது பெரிய தேரையே அளித்தவன். |
| காரி | இரவலரிடம் எப்போதும் அருள் நிறைந்த சொற்களைப்பேசும் இயல்பினன். குதிரையையும் ஏனைய செல்வங்களையும் இரவலர்க்கு வழங்கியவன். |
| ஆய் | ஒளிமிக்க நீல வண்ணக் கல்லையும் நாகம் கொடுத்த ஆடையினையும் ஆலின் கீழ் அமர்ந்த இறைவனுக்குக் கொடுத்தவன். |
| அதியமான் (அதிகன்) | ஔவைக்கு அருநெல்லிக்கனிக் கொடுத்து அழியா அறப்புகழ் பெற்றவன். |
| நள்ளி | தன்னை நாடிவந்தவர்க்கு இல்லை என்று கூறாமல் வேறொருவரிடம் சென்று இரவாதவாறு நிரம்ப நல்கும் இயல்பினன். |
| ஓரி | சிறிய மலை நாட்டைக் கூத்தர்க்குப் பரிசாக வழங்கியவன். |

**பிரிவு - 2**

35. **பேரிடர் மேலாண்மை :**
(i) நடுவண் அரசு 2005-ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.
(ii) புயல், வெள்ளம், நிலநடுக்கம், வறட்சி, சுனாமி, நிலச்சரிவு, தீ விபத்து, சூறாவளி, பனிப்புயல், வேதி விபத்துகள் முதலான பேரிடர்கள் நிகழும்போது பல்வேறு அமைப்புகளை ஒருங்கிணைத்துச் செயலாற்ற இந்த ஆணையம் உதவுகிறது.
(iii) மாநிலம், மாவட்டம், ஊராட்சி, சிற்றூராட்சி என அனைத்து நிலைகளிலும் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.
(iv) இக்குழுக்கள் பேரிடர் காலங்களில் செயலாற்ற, பேரிடர் மேலாண்மை ஆணையம் வழிவகை செய்துள்ளது.

36. **மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்:**
(i) பண்டைய காலத்தில் பிள்ளைகள் முதலில் மணலில் எழுதிப் பழகுவார்கள். அதனால் அவர்களுடைய எழுத்துகள் வரிசையாகவும், நன்றாகவும் இருந்தன.
(ii) உபாத்தியாயர் முதலில் தரையில் எழுத அதன் மேல் பிள்ளைகள் எழுதுவார்கள். பிறகு தாமே எழுதிப் பழகுவார்கள்.
(iii) எழுத்துகள் ஒன்றோடொன்று படாமல் வரிகோணாமல் பழைய காலத்தில் எழுதினார்கள். எழுத்துகளின் உருவங்கள் பல காலமாக மாறாமல் இருந்தன.
(iv) பெரியோர்கள் பழக்கி வந்த பழக்கத்தால் பல நூறு வருடங்களாகியும் எழுதும் வழக்கத்தில் பெரிய மாறுபாடுகள் ஏற்படவில்லை.
(v) தற்காலத்தில் மாணாக்கர்களுக்கு எழுதும் பழக்கம் நன்றாக உண்டாக வேண்டுமென்று ஆசிரியர்கள் ஒவ்வொரு நாளும் அவர்களைத் தனித்தனியே ஏடுகளில் தாம் மேலே எழுதி அதைப்போல் எழுதிவரச் சொல்வார்கள்.
(vi) மாணாக்கர்களின் கையெழுத்து தெளிவாக இருக்க நான்குவரி, இரட்டைவரி நோட்டுகளில் ஆசிரியர்கள் எழுதித் தர அதை மாணவர்கள் பின்பற்றவும் செய்கிறார்கள்.

37. **பண்பாட்டு அடையாளங்கள் :**
(i) சென்னையின் புகழ்பெற்ற கட்டடங்களான மத்தியத் தொடர்வண்டி நிலையம், தென்னகத் தொடர்வண்டித் தலைமையகம், எழும்பூர் தொடர்வண்டி நிலையம், பொது அஞ்சல் அலுவலகம், உயர்நீதிமன்றம், சென்னைப் பல்கலைக்கழகம், ரிப்பன் கட்டடம், விக்டோரியா அரங்கு போன்றவை இந்திய - சாரசனிக் கட்டடக் கலையின் சிறப்புகளை நமக்குக் காட்டுகின்றன.

(ii) 'மெட்ராஸ் ரெக்கார்ட் ஆபீஸ்' சாரசனிக் கட்டட முறையில் அமைந்தது. இது, இன்று தமிழ்நாடு ஆவணக் காப்பகம் என்று வழங்கப்படுகிறது.
(iii) எழும்பூர் அருட்காட்சியகமும், கோட்டை அருங்காட்சியகமும் சென்னையின் அடையாளத்தைப் பாதுகாப்பவையாகும்.
(iv) கன்னிமாரா நூலகம் மற்றும் சென்னைத் திரைப்படத் தொழில் சார்ந்த இடங்கள், திரையரங்கம் ஆகியவை குறிப்பிடத்தக்க அடையாளங்களாகும்.

38. **வேளாண் மேலாண்மை :**
(i) வேளாண்மைக்குள்ளும் மேலாண்மைக் கூறுகள் உண்டு.
(ii) சரியான பயிரைத் தேர்ந்தெடுத்தல்,
(iii) உரிய நேரத்தில் விதைத்தல்,
(iv) நீர் மேலாண்மையை நெறிப்படுத்துதல்,
(v) அறுவடைக்குப்பின் பாதுகாத்தல்,
(vi) உரிய விலை வரும்வரை இருப்பு வைத்தல் என்று ஒவ்வொரு கட்டத்திலும் விழிப்புணர்வும், பொறுப்புணர்வும், நிர்வாக நெறியும், இணைந்தால்தான் வேளாண்மை செழிக்கும்.

## பிரிவு - 3

39.
அ) **அணி சுட்டல் :** இக்குறட்பாவில் ஏகதேச உருவக அணி பயின்று வந்துள்ளது.
**அணி விளக்கம் :** செய்யுளில் ஒரு பொருளை உருவகம் செய்துவிட்டு, அதற்குத் தொடர்புடைய மற்ற பொருள்களை **உருவகம்** செய்யாமல் விட்டுவிடுவது ஏகதேச உருவக அணியாகும்.
**சான்று :**
சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.
**அணிப்பொருத்தம் :** ஏமப்புணை என்பதற்கு பாதுகாப்பான தெப்பம் என்பது பொருளாகும். **'இனம் என்னும் ஏமப்புணை'** என்று உருவகப்படுத்திவிட்டு அதற்குத் தொடர்புடைய பாதுகாப்பான உறவினர்கள் அல்லது சுற்றத்தார் என்று கூறாமல் விட்டுவிட்டதால் இது **ஏகதேச உருவக அணி**யாகும்.

**அல்லது**

ஆ) **அணி விளக்கம்:** உவமை ஒரு வாக்கியமாகவும் உவமேயம் ஒரு வாக்கியமாகவும் வந்து உவம உருபு வெளிப்படையாக வருவது உவமை அணியாகும்.
**சான்று :** உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடன்உறைந் தற்று.
**விளக்கம் :** மனத்தில் உடன்பாடு இல்லாதவருடன் கூடி வாழும் வாழ்க்கை, ஒரு குடிசையில் பாம்புடன் வாழ்வது போன்றது.
**உவமை :** உடம்பாடு இலாதவர் வாழ்க்கை ; **உருபு :** அற்று.

40. **திரண்ட கருத்து :** தமிழ்த்தாயானவள், முதல், இடை, கடை என்ற மூன்று சங்கங்களை அமைத்து, அறிவில் சிறந்த புலவர்களைக் கொண்டு, அந்தச் சங்கத்தில் அளவிட இயலாத பொருட்சுவை நிறைந்த சொற்களால் ஆன கவிதைகளை இயற்றச் செய்து, அற்புதங்களை நிகழ்த்திய பெருமாட்டி ஆவாள்.
**மையக் கருத்து :** முச்சங்கத்தின் வாயிலாக, புலவர்கள் பொருட்சுவையும் சொற்சுவையும் நிறைந்த பாடல்களை இயற்றுவதற்குக் காரணமாக இருந்தவள் தமிழன்னை.
**மோனைத் தொடை :** **மு**ச்சங்கம் - **மு**துபுலவர் ; **அ**ச்சங்க - **அ**ளப்பரிய ; **அ**ற்புதங்கள் - **அ**மைத்த
**எதுகைத் தொடை :** மு**ச்**சங்கம் - அ**ச்**சங்கம் ; சொ**ற்**சங்கம் - அ**ற்**புதங்கள்
**இயைபுத் தொடை :** அடிதோறும் **கூட்டி** என்ற சொல் இறுதியாக அமைந்துள்ளது.
**அணிநயம் :** உயர்வு நவிற்சி அணி

41.
அ) **திணை விளக்கம் :** வெற்றி பெற்ற அரசனும் அவனது வீரர்களும் வெற்றியின் அடையாளமாக வாகைப்பூவை சூடி வெற்றியைக் கொண்டாடுவது வாகைத்திணையாகும்.
**சான்று :**
மெய்க்கொள் பெரும்பனி நலிய பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க
**விளக்கம் :** தம் மேனியின் குளிரினைப் போக்கப் பலரும் கூடி கைகளை நெருப்பில் காட்டிச் சூடேற்றினர். இடையர்களின் கன்னங்கள் புடைத்து நடுங்குமாறு குளிரின் தன்மை இருந்தது.
**திணைப் பொருத்தம் :** இடையர்கள் கூடி குளிரைப் போக்க நெருப்பில் குளிர்காய்வது போல், போர்மேற் சென்ற மன்னனும் குளிர்காலத்தில் தங்கும் படைவீடாகிய கூதிர்ப்பாசறையில் வெற்றியை வீரர்களுடன் கொண்டாடினான்.

**அல்லது**

ஆ) **துறை விளக்கம் :** அரசன் செய்ய வேண்டிய கடமைகளை முறை தவறாமல் செய்யுமாறு அவன் கேட்க அறிவுறுத்தல், செவியறிவுறூஉ என்னும் துறையாகும்.
**சான்று :** காய் நெல்லறுத்துக் கவளம் கொளினே - புறம் (பிசிராந்தையார்)
**துறைப் பொருத்தம் :** குறைந்த நிலமாயினும் அதில் விளைந்த நெல்லை உணவாக்கி கவனமாக கொடுத்தால் யானைக்குப் பல நாள்களுக்கு உணவாகும். ஆனால், நூறு வயலாக இருந்தாலும் யானை தனித்து சென்று உண்டால் அது உண்ணும் நெல்லைவிட காலில் அழிந்து போகும் நெல்லே அதிகமாக இருக்கும். அது போல அறிவுடைய அரசன் வரி திரட்டும் முறை அறிந்து செயல்பட்டால் நாடு செழிப்படையும். அவ்வாறு இல்லாமல் குடிமக்களின் அன்பு கெடுமாறு நாள் தோறும் வரியைத் திரட்ட விரும்பினால் அரசனும் பயனடைய மாட்டான்; நாட்டு மக்களும் துன்புறுவர். என அரசன் செய்ய வேண்டிய கடமைகளை முறை தவறாமல் செய்யுமாறு அவனுக்கு சுட்டிக்காட்டி அறிவுறுத்தியதால் இது செவியறிவுறூஉ துறைக்குப் பொருத்தமாயிற்று.

42.
அ) **குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை**
**பழமொழி விளக்கம் :** நாம் பிறருடைய குற்றங்களைப் பெரிதுப்படுத்தக் கூடாது. அவ்வாறு செய்தால் நமக்கென்று உறவுகளோ நட்போ இருக்காது. இதனைக் 'குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை' என்பர்.
**வாழ்க்கை நிகழ்வு :** தர்ஷிணி, லக்ஷயா, ரோஷிணி மூவரும் தோழிகள். ரோஷிணி எப்போதும் சிறு பிள்ளையாக நடந்து கொள்வாள். எதைப் பற்றியும் சிந்திக்காமல் பேசுவாள். இது மற்றவர்களைக் காயப்படுத்தும். இவள் இப்படி நடந்து கொள்வது தர்ஷிணிக்கும் லக்ஷயாவுக்கும் பிடிக்காது. ரோஷிணியின் குறைகளை எடுத்து சொல்லிக் கொண்டே இருப்பார்கள். இதனால் ரோஷிணிக்கு இருவரையும் பிடிக்காமல் போய்விட்டது. நட்புடன் இருந்த அவர்களும் பிரிந்து விட்டார்கள். இதுவே 'குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை' என்ற பழமொழிக்கேற்ப உள்ளது.
**நீதி :** நாம் எப்போதும் ஒருவருடைய குறைகளை மட்டுமே பார்க்கக் கூடாது. அவர்களின் நல்ல குணங்களையும் நாம் பார்த்து அவர்களைப் பாராட்ட வேண்டும். இல்லையெனில் நட்போ, உறவோ நிலைத்து இருக்காது என்பதே பழமொழி உணர்த்தும் நீதியாகும்.

அல்லது

**ஆ) ஊழி பெயரினும் தாம் பெயரார்.**

**பழமொழி விளக்கம் :** ஒருவர் எச்சூழலிலும் பொய் சொல்லமாட்டார். பிறர் பொருளைக் கவர நினைக்கமாட்டார். சீற்றங்களால் இவ்வுலகமே அழியும் நிலை வரினும் தன் நிலையிலிருந்து மாறாமல் அவருடைய கொள்கையில் நிலையாக இருப்பார். இதனை 'ஊழி பெயரினும் தாம் பெயரார்' என்று கூறுவர்.

**வாழ்க்கை நிகழ்வு :** விருதாச்சலத்தில் பிரியா என்ற பெண் வாழ்ந்து வந்தாள். நன்கு படித்தப் பெண். இளகிய மனம் கொண்டவள். வறுமையிலும் உதவி என்று கேட்டால் தவறாமல் செய்பவள். அவள் ஒருநாள் கோயிலுக்கு சென்று கொண்டிருந்தாள். வழியில் ஒரு பை கிடந்தது. அதை எடுத்துப் பார்த்தாள். அதில் பணம் மற்றும் சில ஆவணங்கள் இருந்தன. அப்போது அவளுக்குப் பணத்தேவை இருந்தது. இந்த பணம் அவள் தேவையை நிறைவேற்றும். ஆனால் அவள் அதை எடுத்துக் கொள்ளவில்லை. காவல் நிலையம் சென்றாள். பணத்துடன் இருக்கும் அந்த பையைக் கொடுத்தாள். பையில் உள்ள ஆவணத்தில் வீட்டு முகவரி இருந்தது. அதைப் பார்த்து உரியவர்களை வரவழைத்து காவலர்கள் ஒப்படைத்தனர். தன் வறுமையிலும் பிரியா நேர்மையாக நடந்து கொண்டாள்.

**நீதி :** நாம் எந்தச் சூழலில் இருந்தாலும் பொய் சொல்லக்கூடாது. பிறர் பொருளுக்கு ஆசைப்படக் கூடாது. உலகம் அழியும் நிலை வந்தாலும் தன் நிலையில் இருந்து மாறக்கூடாது என்பதே இப்பழமொழி உணர்த்தும் நீதியாகும்.

43. 1) உங்களை மக்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்றால், நீங்கள் அவர்களது மொழியிலேயே உரையாட வேண்டும்.
2) புதிய மொழி என்பது புதிய வாழ்க்கை போன்றது.
3) என்னுடைய மொழியின் எல்லையே என்னுடைய உலகத்தின் எல்லை ஆகும்.
4) பன்மொழி அறிவானது, ஞானத்தின் நுழைவாயில் ஆகும்.

## பகுதி - IV

44.

**அ) முன்னுரை:** கம்பனின் காவியமான இராமாயணம், இராமனை பண்பின் வடிவமாகப் படைத்துள்ளது. தந்தை, தாய், வேடன், பறவை, எளிய முதியவள், வானரம், எதிரியின் தம்பி ஆகிய உயிர்களின் மீதும், பிற உயிர்களின் மீதும் இராமன் கொண்டிருந்த அன்பின் நிலையைப் பற்றி இங்கு காண்போம்.

**கழுகுவேந்தன் சடாயு மீது கொண்ட பரிவும், கடமையும்:** இராவணன் சீதையைச் சிறையெடுத்தபோது கழுகு வேந்தன் சடாயு தடுத்துச் சண்டையிட்டுக் காயப்படுகிறான். இராமனிடம் நடந்ததைக் கூறி இறந்துவிடுகிறான். இராமன், தன் தந்தையின் நண்பனான அக்கழுகு வேந்தனையும், தன் தந்தையாகவே கருதி, மகன் நிலையில் அவனுக்குரிய இறுதிச் சடங்குகளைச் செய்கிறான்.

**குகனுடன் கொண்ட உறவு நிலை :** வேடுவர் தலைவன் குகன். குகனை நோக்கி இராமன், "என் உயிர் போன்றவன்! "என்றான். எனது உறவுகள் எல்லாம் இனி உன்னுடையதும் ஆகும். நான் உன்னுடைய ஏவலுக்கு ஏற்ப பணிபுரிபவன் என்றான். துன்பம் என்ற ஒன்று இருந்தால் தானே இன்பம் புலப்படும். பிரிகிறோம் என்று வருந்தாதே. இப்போது உன்னையும் சேர்த்து நாம் ஐவர் ஆகின்றோம் என்றான் இராமன்.

**சவரியிடம் இராமன் காட்டிய பரிவு :** இராமன், அன்பளாகிய சவரியிடம் தாயிடம் காட்டும் அன்பைக் காட்டினான். சவரியிடம் இனிதாகப் பேசினான். தன்னையே நினைத்துத் தவமிருந்த சவரியிடம், "இவ்வளவு காலம் நீ துன்பம் ஏதுமின்றி நலமுடன் இருந்தாய் அல்லவா?'' என்று பரிவுடன் கேட்டான்.

**சுக்ரீவனை நண்பனாக ஏற்றல் :** ஆசையை அறவே அழித்த இராமனும், வானரத் தலைவன் சுக்ரீவனும் அமாவாசைக் காலத்தில் ஒன்றாக இணைந்திருக்கிற சந்திரனையும், சூரியனையும் ஒத்து இருந்தார்கள். சுக்ரீவனை நண்பனாக ஏற்றுக் கொள்கிறான் இராமன்.

**இராமன் வீடணனிடம் காட்டிய அன்பு :** "வீடணனே! நாங்கள் நால்வர் உடன் பிறந்தவர்களாக இருந்தோம். குகனுடன் சேர்ந்து நாங்கள் ஐவர் ஆனோம். பின்னர் கதிரவனின் மகன் சுக்ரீவனுடன் அறுவர் ஆனோம். இப்பொழுது உன்னுடன் சேர்ந்து எழுவர் ஆனோம்'' என இராமன் வீடணனிடம் கூறினான்.

**முடிவுரை :** இவ்வாறாக, வேடன், பறவை, எளிய முதியவள், வானரம், எதிரியின் தம்பி என வேலிகள் இன்றி அனைவரிடமும் சமமாக அன்பு கொண்ட தூய உள்ளத்தவன் இராமன். உடன்பிறப்பியம் என்ற எல்லை கடந்து அன்பு கொண்ட இராமன் பண்பின் படிமமாகத் திகழ்கிறான்.

அல்லது

**ஆ) முன்னுரை :** தெய்வநூலாய் போற்றப்படும் திருக்குறளில் அறிவுடைமை என்னும் அதிகாரம் வாழ்வின் உயர்வுக்கு எவ்வாறு துணைநிற்கிறது என்பதை இக்கட்டுரை வழிநின்று காண்போம்.

(i) **அறிவு அரண் :** அறிவு, அழிவு வராமல் காக்கும் கருவியாகும். அது பகைவராலும் அழிக்க முடியாத பாதுகாப்பு அரணாகும்.

**அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்**
**உள்அழிக்கல் ஆகா அரண்.**

(ii) **தீமை ஒழித்து நன்மைத் தருவது அறிவு :** மனத்தை அது போகும் போக்கில் செல்லவிடாமல், தீமையிலிருந்து விலக்கி, நல்ல வழியில் செலுத்துவதே அறிவாகும்.

**சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ**
**நன்றின்பால் உய்ப்பது அறிவு.**

(iii) **மெய்ப்பொருள் காண்பது அறிவு :** எப்பொருளை யார் யார் சொல்ல கேட்டாலும் அப்பொருளின் மெய்யான பொருளைக் காண்பதே அறிவாகும்.

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு.**

(iv) **உலகத்தின் உயர்ந்த நெறி :** உலகம் எத்தகைய உயர்ந்த நெறியில் செல்கிறதோ, அந்நெறியில் தானும் உலகத்தோடு இணைந்து செல்வதே அறிவாகும்.

**எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு**
**அவ்வது உறைவது அறிவு.**

(v) **முன்கூட்டியே அறிவும் அறிவு :** பின்பு வரப்போவதை முன்பே அறிந்து காத்துக்கொள்ளும் வல்லமைகொண்ட அறிவுடையவர்க்கு, அவர் நடுங்கும்படியாக வரக்கூடிய துன்பம் ஒன்றும் இல்லை.

**எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை**
**அதிர வருவதோர் நோய்.**

**முடிவுரை :** வாழ்வின் உயர்வுக்கு அறிவே துணை நிற்கும் என்பதை அறிவுடைமை என்னும் அதிகாரத்தில் இடம்பெற்ற ஐந்து குறள்களின் மூலம் அறிந்தோம்.

45.

அ) **முன்னுரை:** கல்வியும் அதன் நோக்கமும் கல்விக் கூட அமைப்பும் கற்பிக்கும் முறைகளும் காலந்தோறும் இலக்கியங்களில் பதிந்திருக்கின்றன. அந்நாளைய கற்பித்தல் முறைகளைப் பழையன என்று புறந்தள்ளிவிடாமல், தேவையானவற்றைப் பயன்படுத்தினால் மிகுந்த பயன்தரும்.

**வித்தியாரம்பம் :** பண்டைக்காலத்தில் பிள்ளைகளின் ஐந்தாம் பிராயத்தில் வித்தியாரம்பம் ஆகிறது. பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்தில் வைக்கும் காலம் ஒரு பெரிய விசேட நாளாகக் கொண்டாடப் பெறும். ஏட்டின்மீது மஞ்சள் பூசிப் பூசித்துப் பையனிடம் கொடுத்து வாசிக்கச் செய்வார்கள். உபாத்தியாயர் நெடுங்கணக்கைச் சொல்லிக் கொடுக்க மாணாக்கன் அதனைப் பின்பற்றி சொல்லுவான்.

**மையாடல் விழா :** சுவடிகளிலுள்ள எழுத்துக்கள் செவ்வனே தெரிவதற்காகச் சுவடியில் வசம்பு, மஞ்சள், மணத்தக்காளி இலைச் சாறு, மாவிலைக்கரி, தர்ப்பைக்கரி முதலியவற்றை சேர்த்து செய்த மையை சுவடியில் தடவி வாசிக்கச் செய்வார்கள். இதனால் அக்ஷராப்பியாசத்தை 'மையாடல் விழா' என்று கூறுவார்கள்.

**எழுத்துப்பயிற்சி :** பிள்ளைகள் முதலில் மணலில் எழுதிப் பழகுவார்கள். ஆசிரியர் தரையில் எழுத, மாணவர்கள் அதன் மேல் எழுதினார்கள். ஆகவே அவர்களது எழுத்துகள் வரிசையாக, தெளிவாக, ஒன்றோடு ஒன்று ஒட்டாமல் இருந்தது.

**மனனப்பயிற்சி :** தமிழில் நிகண்டு, நன்னூல், காரிகை, தண்டியலங்காரம், நீதிநூல்கள் முதலியன பாடமாக இருக்கும். கணிதத்தில் கீழ், மேல்வாயிலக்கம், குழிமாற்று, முதலியன பாடமாக இருக்கும். இவற்றை மாணவர்கள் மனனம் செய்தனர்.

**வாதம் புரிதல் :** மிகச் சிறந்த நூற்பயிற்சியுடையவர்கள் அரசவைகளில் வாதுபுரிந்து தம் கல்வித் திறமையை வெளிப்படுத்தினர் என மதுரைக்காஞ்சி எடுத்துக் கூறுகிறது. வாதம்புரியும் பழக்கம் பாடசாலைகளிலிருந்தே வளர்ச்சியுற்று வந்தது.

**சாந்துணையும் கற்றல் :** பள்ளியில் படிப்பதோடு மட்டுமல்லாமல், அது வாழ்நாள் முழுதும் தொடர்ந்தது. பின் ஆசிரியர்கள் இருப்பிடம் தேடிச் சென்றும் மாணவர்கள் கல்வி கற்றனர். "என் ஒருவன் சாந்துணையும் கல்லாதவாறு" எனத் திருக்குறள் கூறுகிறது.

**ஓதற்பிரிவு :** இல்லறம் நடத்தும் காலத்தில் கூட, வேற்று நாட்டுக்குச் சென்று அங்கங்கே உள்ளாருக்குத் தம்முடைய கல்வியைக் கற்பித்தும் வாதம் புரிந்து வென்றும், தாம் முன்பு அறியாதவற்றைக் கற்றும் வந்தனர். ஓதற்பிரிவுக்கான கால எல்லை மூன்று ஆண்டுகள் என தொல்காப்பியம் கூறுகிறது.

**முடிவுரை :** காலத்தின் வேகம் அந்தப் பழைய காலத்துப் பள்ளிக்கூடங்களை மாற்றியமைத்தாலும் விட்டாலும் அவற்றால் உண்டான நற்பயன்களையும், அவற்றிற் படித்த பேரறிஞர்கள் நமக்கு ஈட்டி வைத்துள்ள நூல்களையும் நினைக்கும் போது, நமக்கு ஒரு பெருமிதம் உண்டாகிறது.

**அல்லது**

ஆ) **முன்னுரை :** தமிழ் மண்ணில் ஆற்றங்கரை நகரங்கள், கடற்கரை நகரங்கள் ஆகியவற்றைப் பற்றிய பதிவுகள் வரலாற்றின் பக்கங்களை ஆளுகின்றன. இந்தியாவில் மூன்று நூற்றாண்டுகளாக ஆங்கிலேயர்களின் ஆட்சிக்கு அடித்தளமாகவும் அதிகார மையமாகவும் விளங்கிய கடற்கரை நகரமே மதராசப்பட்டினம். அது இன்று சென்னை மாநகரமாக வளர்ந்திருக்கிறது. அந்நகரம் குறித்துக் இக்கட்டுரையில் காண்போம்.

**சென்னையின் தொன்மை :** குடியம், அத்திரம்பாக்கம் போன்ற பகுதிகள் ஒரு இலட்சம் ஆண்டுகள் பழமையானது. கொற்றலையாறு மனித நாகரிகத்தின் முதன்மை களமாகும். பல்லாவர கற்கோடாரி அகழ்வாய்வில் பெரும் திருப்புமுனை ஏற்படுத்தியது. கி.பி.2ஆம் நூற்றாண்டு தாலமி குறிப்பிட்ட மல்லியர்பா துறைமுகம் என்பதே இன்றைய மயிலாப்பூர் ஆகும். ஆயிரம் ஆண்டுகள் பழைமையான திருவொற்றியூர், திருவான்மியூர் போன்ற கோயில்கள் அமைந்துள்ளன. கி.பி. 12 - 13 ஆம் நூற்றாண்டுகளில் புகழ்பெற்ற கிராமங்களாக கோயம்பேடு, தாம்பரம் போன்றன விளங்கின.

**முக்கிய ஆறுகள் மற்றும் கால்வாய்கள் :** கொற்றலையாறு, கூவம், அடையாறு, பாலாறு, பக்கிங்காம் கால்வாய், காட்டன் கால்வாய், விருகம்பாக்கம் கால்வாய், ஓட்டேரி நல்லா போன்றவை முக்கிய நீர்நிலைகளாக விளங்கின. மயிலாப்பூருக்கு வடக்கே குப்பங்கள் இருந்த பகுதியின் இருபுறமும் கூவம் நதி அழகான ஆறாக கரைபுரண்டு ஓடியது. அது 'திருவல்லிக்கேணி ஆறு' என்றும் அழைக்கப்பட்டது.

**நகரம் உருவாக்கம் :** ஆங்கிலேயர் வருகைக்குப் பின் கட்டப்பட்ட செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் உள்பகுதி 'வெள்ளையர் நகரம்' என்றும் வெளிப்பகுதி 'கறுப்பர் நகரம்' என்றும் அழைக்கப்பட்டன. வடசென்னைப் பகுதிகள் 'மதராசப்பட்டினம்' என்றும் தென்சென்னைப் பகுதிகள் 'சென்னைப் பட்டினம்' என்றும் அழைக்கப்பட்டன. ஆங்கிலேயர் இவ்விரண்டையும் இணைத்து 'மதராஸ்' என அழைத்தனர். அதுவே 'மெட்ராஸ்' என்று மருவி இன்று சென்னையாக பெயர் மாற்றமடைந்துள்ளது.

**பண்பாட்டு அடையாளங்கள் :** சாரசனிக் கட்டட முறையில் ஆங்கிலேயர் அமைத்த 'மெட்ராஸ் ரெக்காட் ஆபீஸ்' (தற்போது தமிழ்நாடு ஆவணக்காப்பகம்), எழும்பூர் அருங்காட்சியகம், கோட்டை அருங்காட்சியகம் திரைப்படத் தொழில் சார்ந்த இடங்கள் பண்பாட்டு அடையாளங்களாகத் திகழ்கின்றன.

**சென்னை நூலகங்கள் :** சென்னை இலக்கியச் சங்கம், கன்னிமாரா பொது நூலகம் (இந்தியாவின் முதல் பொது நூலகம்) கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், அண்ணா நூற்றாண்டு நூலகம், தமிழாய்வு நூலகங்கள் உள்ளன.

**சென்னை–நம்பிக்கை மையம் :** சென்னையை மையமாகக் கொண்டு உருவான தொழிற்சாலைகளும் கணினி நிறுவனங்களும் நேரடி, மறைமுக வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளன.

**போக்குவரத்து :** 1856-இல் தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் இராயபுரத்தில் அமைக்கப்பட்டது. சாலைப்போக்குவரத்து, தொடர்வண்டி போக்குவரத்து, துறைமுகம், விமானநிலையங்கள் சென்னையில் சிறப்பாக வளர்ச்சியடைந்துள்ளன.

**அறிவின் நகரம் :** சென்னையில் இந்திய விடுதலைக்கு முன்னரும் பின்னரும் உருவாக்கப்பட்ட பல கல்வி நிறுவனங்கள் சென்னையை அறிவின் நகரமாக மாற்றியுள்ளன. 19ஆம் நூற்றாண்டில், கல்வி வளர்ச்சியின் உடனிகழ்வான அச்சுப்பரவல், நாளிதழ் பெருக்கம் ஆகியவை சென்னையின் அறிவு வளர்ச்சிக்குத் துணை நின்றன.

**முடிவுரை :** சென்னை மாநகருக்கென்று இருக்கின்ற தனித்துவமான அமைப்பு, வரலாற்றுத் தடங்கள் ஆகியவற்றை சிதைத்து விடாமல் அதன் வடிவழகைப் பாதுகாக்க வேண்டும்.

46.

அ) **முன்னுரை :** உத்தமசோழன் எழுதிய 'முதல்கல்' கதை நமக்கு பாடமாக அமைந்துள்ளது. பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை இக்கதையின் மூலம் அறிந்து கொள்வோம்.

**மருதனின் சோகம் :** வளவனாற்றின் வடகரையில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை பச்சைப் பசேல் என்று விரிந்து கிடந்த வயல்வெளிகள் நடவு முடிந்து ஒரு வாரம் பத்து நாளான பச்சை பிடிக்கத் தொடங்கியிருந்த இளம்பயிர், இப்போதோ சற்றுப் பொறுத்தோ நீருக்குள் மூழ்கிவிடும் ஆபத்தில் இருந்தது மருதனை சோகத்தில் ஆழ்த்தியது.

**மருதனின் யோசனைகள் :** அதோடு நில்லாமல் வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் மேலும் வலுப்பெற்று மேற்கு வடமேற்காக நகரக்கூடும். இதன் விளைவாக அடுத்த நாற்பத்தெட்டு மணி நேரத்திற்கு நாகப்பட்டினம், கடலூர் உள்ளிட்ட கடலோர பகுதிகளில் பலத்த மழைபெய்யக்கூடும். இப்படி வாடிக்கையான செய்திகளைக் கேட்ட மருதன் 'எந்த மழையின் உதவியில் நட்டார்களோ அதே மழையின் "அபரிமித அன்பினால் இப்போது பயிர் தெப்பலாடுகிறது. ஒருநாள் மூழ்கினால் போதுமே முழுவதும் அழுகிவிடுமே. மறுபடி புதிதாக நாற்றுவிட்டு புதிய சாகுபடிதான். அதற்கு யாரால் முடியும்? என்ன செய்யலாம்" என்று மருதனுக்கு ஆயிரம் யோசனைகள்.

**மருதனின் மகிழ்ச்சி :** ஊரைச் சுற்றி வளைந்து ஓடிவரும் மூன்று மைல் நீள வடிவாய்க்கால் முழுவதுமே சுவர் வைத்துத் தடுத்ததைப் போல் காடாய் மண்டிக் கிடக்கும் நெய்வேலி காட்டாமணக்குச் செடிகளைப் பிடுங்கி எறிந்தால் போதும். ஒரே நாளில் உபரி நீர் முழுவதும் வடிந்து விடுமே. பயிர்கள் மூழ்காமல் மொத்தக் கிராமமும் தப்பித்துக் கொள்ள வழி கண்டுபிடித்து விட்ட சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தான் மருதன்.

**மருதனின் பொறுப்புணர்வு :** தன் முயற்சியால் வடிவாய்க்காலில் ஜில்லென்ற இடுப்பளவு தண்ணீரில் தன்னந்தனியே நின்றபடி மண்டிக் கிடந்த காட்டாமணக்குச் செடிகளை 'சரக் சரக்' என்று அறுத்து மேலே எறிந்து கொண்டிருந்தான் மருதன். மருதனின் மனைவி அல்லி, தன் கணவன் படும்பாட்டைக் கண்டு திகைத்து, தன்னை அறியாமலேயே புடவையை வரிந்துக் கட்டி வாய்க்காலில் இறங்கினாள். அடுத்த சில நிமிடங்களில் ஊர் மிராசு காளியப்பன் வண்டியிலிருந்து குதித்து வாய்க்காலில் இறங்கினார். வண்டிக்காரன் மூலம் செய்தி ஊர் முழுவதும் பரவியது. ஊர் மக்கள் செய்தி அறிந்து மதகை நோக்கி வரத் தொடங்கினார்கள். ஊரே கூடி வாய்க்காலை தூய்மை செய்தனர்.

**முடிவுரை:** ஊரில் யாருக்கும் இல்லாத அக்கறை மருதனுக்கு இருந்ததைப் பார்க்கும்போது, தன் பொறுப்புணர்வால் பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊர் மக்களை மாற்றிய மருதனின் பண்பு நலம் தெளிவாகத் தெரிகிறது. ஊர்க்கூடி தேர் இழுத்தால் அது தானாக சேர வேண்டிய இடத்தில் வந்து நிற்கும்.

**அல்லது**

**ஆ) முன்னுரை :** வாழ்வை முழுமையாக்கும் கூறுகளுள் முதன்மையானது பயணம். அதிலும் சாலைவழிப் பயணம் மனதிற்கு இன்பத்தை அளிக்கக் கூடியது. அத்தகைய பயணத்தை நாம் அனைவரும் பாதுகாப்பாக மேற்கொள்ள வேண்டும். சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு என்பதை நனவாக்க நாம் பின்வரும் வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

**விபத்துக்கான காரணங்கள் :**

(i) அவசரம் என்ற பெயரில் பெரும்பாலான விபத்துகள் நடைபெறுகின்றன.
(ii) வாகன ஓட்டுநரின் கவனக் குறைவு. வாகனம் ஓட்டுபவர் போதிய பயிற்சியின்றி ஓட்டுதல்.
(iii) தட்ப வெப்பநிலையில் மாறுபாடு. வாகனம் இயங்கிக் கொண்டிருக்கும் போது வாகனத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர இயலாதபடியான இயந்திரக் கோளாறுகள்.
(iv) வாகனங்களில் மிகுதியான ஆட்களையோ, சரக்குகளையோ ஏற்றிச் செல்வது.
(v) தொடர் வண்டி இருப்புப் பாதைகளைக் கவனிக்காமல் அதனைக் கடப்பது. ஓடும் பேருந்தில் படியில் பயணம் செய்வது. வாகனத்தை மிகு வேகமாக இயக்குவது
(vi) காதணி கேட்பிகளை பொருத்திக் கொண்டு ஊர்திகளை ஓட்டுவது
(vii) ஊர்தியை குறுக்கும் நெடுக்குமாக இயக்குவது
(viii) சாலையின் நடுவே செல்வது
(ix) கவனிக்காமல் சாலையைத் திடீரென்று கடப்பது, மது அருந்திவிட்டும், தொலைபேசி பேசிக்கொண்டும் வாகனத்தை இயக்குவது போன்ற காரணங்களால் விபத்துகள் நடக்கின்றன.

**விபத்துகளைத் தவிர்க்கும் நடவடிக்கைகள் :**

(i) சாலை விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.
(ii) சாலைகளில் இருக்கும் குறியீடுகளை அறிந்து கொள்ள வேண்டும்.
(iii) தலைக்கவசம் (Helmet) இருக்கைப்பட்டை (Seat Belt) போன்றவற்றை அணிய வேண்டும்.
(iv) எதிரில் வரும், கடந்து செல்ல முற்படும் ஊர்திகளுக்கு வழிவிட்டுச் செல்ல வேண்டும்.
(v) இதர சாலைப் பயனாளிகளை நண்பராக எண்ண வேண்டும்.
(vi) பிற ஊர்தி ஓட்டிகளுக்கு விட்டுக்கொடுப்பது சிறந்தது.
(vii) தூக்கத்தின் போதும், மிகுந்த களைப்பின் போதும் வாகனத்தை இயக்காமல் ஓய்வெடுத்த பின் செல்ல வேண்டும்.
(viii) இரவு நேரங்களில் வாகன விளக்குகளை எதிரில் வரும் வாகனங்களுக்கு ஏற்ப வழிவிட்டு பயன்படுத்த வேண்டும். இவற்றைக் கடைபிடித்தால் விபத்துக்களைத் தவிர்த்து, விபத்தில்லா தமிழ்நாட்டை உருவாக்கலாம்.

**முடிவுரை :** | நில், கவனி, செல் |

சாலை விபத்து ஏற்படுவதற்கான காரணங்களையும், சாலை விபத்துக்களைத் தவிர்க்கும் நடவடிக்கைகளையும் நாம் நன்றாக அறிந்து, அவற்றைப் பின்பற்றி வந்தால் சாலை விபத்தில்லா 'தமிழ்நாடு' என்ற கனவு பலிக்கும்.

47.

**அ) புறநானூறு**

அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென,
வறுந்தலை உலகமும் அன்றே; அதனால்
காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை;
மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத்து அற்றே
எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே.

**பாவகை : நேரிசை ஆசிரியப்பா, திணை :** பாடாண்
**– ஔவையார்**

**ஆ)** அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள். **– திருவள்ளுவர்**

☆ ☆ ☆